# தலித் தன் வரலாற்றுப் புதினங்களில் "தீண்டாமை"

**முனைவர். மு. அய்யப்பன்**
முதுமுனைவர் மு. ஐயப்பன்,
பேராசிரியர் (உதவி),
வ.உ.சி. கல்லூரி, தமிழ்த்துறை,
திருநெல்வேலி

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

தொல் பழங்காலந்தொட்டே பாதுகாக்கப்பட்டு வரும் மத அடிப்படையிலான "தூய்மையின் கீழ" சமயவாதிகளால் தங்களின் மதிப்பையும்இ தம் சமுதாய மேலாண்மையையும் நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு கையாளப்பட்ட நுட்பங்களுள் ஒன்றான "ஒவ்வாக்குலம்" என்பதன் வழியமைந்த "தீண்டாமை மற்றும் விலக்குதல்" என்ற நிலைக்குத் தள்ளப்பட்டத் தலித் மக்களின் மீது நிகழ்த்தப்பட்டடச் சமூகத்தின் பல்வேறு தளங்களிலும் அமைந்தத் "தீண்டாமைக் கொடுமைகளைக்" "கருக்கு (1994), "கலக்கல்" (1994) என்ற இரு தலித் தன்வரலாற்றுப் புதினங்களின் வழியே ஆராயும் நோக்கோடு இக்கட்டுரையானது நகர்கின்றது.

## தீண்டாமை பாகுபாடுகள்

### சமயத் தளங்களில் தீண்டாமை

இந்துச் சமயத்தில் வெறுப்படைந்து, தலித் சமூக அடையாளங்களைப் பறிகொடுத்த நிலையில் சமமாகப் பழகும் அந்தஸ்தும், சுதந்திரமான உரிமைகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கத்தோலிக்க கிறிஸ்தவத்திற்கு மாறுகின்றனர் தலித்இன மக்கள். ஆனால் அங்கும் நிலவுகிற பல்வேறான தளங்களிலும் (குறிப்பாக வழிபாடு உள்ளிட்ட) சாதிய அடிப்படையிலேயே தீண்டாமை பாராட்டப்படுகின்றது. இந்துத்துவச் சாதிய கொடுமைகள் அனைத்தையும் உள்வாங்கிய நிலையிலேயே கிறிஸ்தவமும் செயல்படுகின்றது. இதனை உணர்ந்த நிலையில் தலித் தன்வரலாற்று நாவல்களின் தலைமை மாந்தர்கள் வேதனையில் தவிப்பதில் இருந்து கிறிஸ்தவ சமயத்தளத்திலே எத்தகைய மனிதத் தன்மையற்ற செயல் நிகழ்ந்திருக்கும் என்பது புலப்படுகின்றது. "கருக்கு"வில் ஆசிரியர் பாமா "தீண்டாமைன்னு சொல்லுகிறது நானு மூனாங்கிளாஸ் படிக்கையிலே கேட்டதே இல்ல. ஆனா இப்பிடின்ன என்னன்ன பாத்து, ஒணந்து, அனுபவிச்சு அவமானப்பட்டிருக்கிறேன்" (ப.23) என்பதிலிருந்து தன் சின்னஞ்சிறு வயது முதல் துறவு மடத்தை தூக்கி எறிந்து விட்டு தன் இன மக்களின் விடுதலைக்காகப் போராடுவது வரையிலும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டுவந்துள்ளனர் என்பதும் தலித் கிறிஸ்தவர்கள் சகலமட்டங்களிலும் குறிப்பாகச் சமயதளத்தில் அதிகமாக ஒடுக்குதலுக்கு உள்ளாவதையும் நாவல் வழி வெளிக்காட்டுகின்றார். குறிப்பாக உயர்சாதி கிறிஸ்தவர்களுக்

கென்றும் தலித் கிறிஸ்தவர்களுக்கு என்றும் பாகுபடுத்தப்பட்டக் கல்லறை வகைப்பாடு (பா.37) சாதியின் பெயரால் தீண்டாமைப் பாராட்டப்படுவதும் (ப. 78) கட்டாய வழிபாட்டுக்கு உட்படுத்துவது (ப. 79) புது நன்மை வழங்குவதில் தலித்துக்கள் மீதான நடவடிக்கைகள் (பக் 80இ 81)மடங்கள்இ பள்ளிகள் மற்றும் சமூக தளத்தில் சிஸ்டராகச் சேருவதற்கு ஆசிரியர் படும் துன்பமும் வேதனையும் (ப. 33) மூடப்பழக்கத்திற்குள் தள்ளப்படும் நிலை (பக். 80 - 81 - 82) இப்படி தான் அடைந்த துன்பத்தைக் குறித்துக் கூறும் வரிகளில் சமத்துவமான ஏக்கத்தை உணரமுடிகிறது. (ப.80) தலித் கிறிஸ்தவ விழாக்களில் தனிமைப்படுத்தப்படுதல் (ப.94) தலித் குழந்தைகள் மடத்தில் கன்னியாஸ்திரியின் கொடுமைக்கு ஆட்படல் (ப. 96) கிறிஸ்தவ திருச்சபையின் உண்மை நிலை, மடத்தினுள் தலித் பெண்கள் படும் துன்பம்இ சந்தித்த கொடுமைகள் (பக் 100 - 106 வரை) என்பன போன்ற நிலைகளையும் ஆசிரியர் சுட்டுகிறார். கலக்கல் ஆசிரியர் விடிவெள்ளியோ, கத்தோலிக்கக் கிறிஸ்தவச் சமயத்தின் போலி முகத்திரைகளைக் கிழித்தெறிந்து அதன் செயற்பாடுகளையெல்லாம் அம்பலப்படுத்துகின்றார். குறிப்பாகச் சுட்டுமிடத்து ‘‘வியாகுலமாத சாலையில் சின்னப்ப வாத்தியாருக்கு நிகழும் கொடுமை, அவரது இறப்புச் சடங்கில் நிகழும் மனிதத் தன்மையற்ற செயல், பாவச் சங்கீர்த்தனைத் தொட்டியில் தள்ளுதல் - சந்திப்பு செய்ய நிர்பந்திக்கப்படுவது, திருச்சபை சீர்கேடுகளை ஆசிரியரே வெளிப்படுத்துதல் (பக் 8 - 9) மதத்தின் இறைமொழி வாசகங்களைக் கூறி தலித்துக்களை ஏமாற்றுதல் (ப.12) மழுங்கடிக்கும் மடத்துச் செயற்பாடுகள் (பக். 19 - 21) இயேசுவின் பிரதிநிதிகளின் சுய வெளிப்பாடுகள் (ப. 27) மனிதம் சிதைக்கப்படுதல் (19 - 21) உயர்பதவியிலுள்ள ஆண்களிடம் சிக்கித் தலித்பெண்கள் படும் துன்பம் (பக். 43/45) (ப. 31) சபையின் துறவு வாழ்வில் நிகழும் பாலியல் பதுங்காட்டங்களில் பங்குகுருமார், துறவிகள், பெண் துறவிகள் / இல்லத்தலைவிகள் இவர்களின் பாலியல் பதுங்காட்டங்கள், சிறைச் சாலையில் நிகழ்த்தப்படும் கொடுமைகள் (பக். 55 -62) என்பன போன்ற நிலைகளிலும் இவ்விரு நாவல்களும் கத்தோலிக்கக் கிறஸ்தவச் சமயத்தளத்தில் மேல் நிலையிலிருந்து அடிமட்டம் வரையிலான நிலைகளில் தலித்துக்கள் படும் தீண்டாமையிலமைந்த ஒடுக்குமுறைகளையும், அவர்களின் துன்பங்களையும் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

**கல்வித் தளத்தில் தீண்டாமை**

“கருக்கு” பாமா, தீண்டாமை என்றால் என்ன என்பதையே கல்வி நிறுவனங்களின் நுழைவின் வழியாகத்தான் அறிவதாகக் கூறுவதிலிருந்து கல்வி நிறுவனங்களிலும் கூடத் தீண்டாமை நுழைந்ததை உணர்த்துகின்றது. (ப. 23) சாதிப்பெயர் சொல்லித் தீண்டாமைக்குட்படுத்துதல், இயற்கையாக நிகழ்ந்த தவறுக்காகத் தண்டித்தல், விடுதிகள், பள்ளிகளில் தலித்துக்கள் நடத்தப்படும் விதம் என்கின்ற நிலையில் கல்வி நிறுவனங்களில் நிகழும் கொடுமைகளையும் தொடர்ந்து கல்லூரி, கல்லூரிவிடுதிகள் போன்றவற்றில் இழிவாக நடத்தப்படுதல் (பக். 27, 28, 30, 31) வழியாகவும் மற்றும் கன்னியாஸ்திரி பள்ளிகளில் பயிற்சி முடிந்த நிலையில் மடத்தினுள் கீழ்மட்ட வேலைக்குக் கட்டாயப்படுத்தப்படுதல் (பக்.57 - 58 - 77) விடுதி கண்காணிப்பாளர் ஆசிரியர்கள் உள்ளிட்டப் பல்வேறு தளங்களிலும் சாதிப் பெயரைச் சொல்லியே தீண்டாமைக்கு உட்படுத்துவதும் சாதி தன்மைக்கு ஏற்றவாறு பள்ளி நிறுவனங்கள் செயல்பட்டு தலித்துக்களை ஒடுக்குவதையும் (ப. 108) வெளிப்படையாகப் புலப்படுத்துகின்றார். “கலக்கல் புதினமும்” தலித் மாணவர்கள் அறியாமைக்குள் அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலே நடத்தப்படுவதாகக் கூறுகின்றது. (ப. 71) இவற்றிலிருந்து நன்னடத்தையினையும், ஒற்றுமை உணர்வையும், அறிவியல் வழி அமைந்த அனுபவ அறிவையும், விழிப்புணர்வையும் கற்றுக் கொடுக்க வேண்டியக் கல்விநிறுவனங்களில் உயர் ஜாதி, தாழ்ந்த சாதி என்ற வேறுபாடுகள் ஊடாடுவதும் கல்விநிறுவனப் பொறுப்பில் உள்ளவர்கள் தலித்மக்களை அவர்களின் சாதிப்பெயரைச் சொல்லித்திட்டுவதும், இளம் பிஞ்சுகளின் நெஞ்சிலே பேதமை எண்ணத்தை வெளிச்சமாக்குவதிலிருந்து அறிவு தரும் கல்விநிறுவனங்களே தலித்துக்கள் மீது அறியாமையினைப் புகட்டுவதும் அடிமைப்படுத்தி ஆள நினைப்பதும் கலக்கலை விட ‘கருக்கு’ புதினம் வழி மிக நுணுக்கமாக உணரமுடிகிறது.

**பொதுத்தளங்களில் தீண்டாமை**

எந்த ஒரு மனிதனும் தனி ஒருவனாக நின்று இவ்வுலகில் ஜீவிக்க முடியாது. அவன் தன்னைச் சுற்றியுள்ள அக மற்றும் புறச் சமயத்தைச் சார்ந்தே வாழ்கின்றான் என்கின்ற அடிப்படையில் தலித்துக்கள் மேட்டிமை சாதியினரைச் சார்ந்தே வாழும் நிலையானது இங்கு புலப்படுத்தப்படுகின்றது. அது மட்டுமின்றி, பல்வேறு வேலை தளங்களிலும்கூட சாதியத்தீண்டாமையிலான ஒடுக்குதல்களுக்கு ஆட்படுகின்ற கொடுமைகளையும் இத்தலித் தன்வரலாறுகள் வெட்டவெளிச்சமாக்குகின்றது. ‘கருக்குவில் ஒடுக்குதல்களாக ‘மேல்சாதிக்காரர்களுக்குத் தாழ்த்தப்பட்டப் பெரியவரால் வடை வாங்கிக் கொடுக்கப்படும் விதம் (ப.24) வேலைத் தளத்தில் தலித் பெண்களுக்கான மரியாதை குறைவு (ப. 25) மேல் சாதிக்காரர்களின் உடைமைகளைத் தொடமுடியாத நிலை (ப. 17) பொதுநூலகங்களில் தலித் வாசகர்களுக்கான மதிப்பின்மை (பக். 26, 27) என்பன உள்ளிட்ட நிகழ்வுகளை அறிய முடிகின்றது. மேலும் “பறச்சாதியில நாம பொறந்திட்டதினாலே நமக்குன்னு மதிப்போ, மரியாதையோ, கௌரவமோ இல்லாம போச்சு” (ப. 27) என்ற உரையாடல் மூலமும் பொதுத்தளங்களில் கூடத் தலித்துகளுக்கு வழங்கப்படும் மரியாதைக் குறைவிற்கானக் காரணத்தை வெளிப்படுத்துகின்றார். மேலும் கல்லறைச் சண்டை, (ப 37) மேட்டிமை சாதியினரின் வன்முறைக்குப் பயந்து மறைவாய் பிணத்தைப் புதைத்தல், (பக். 47, 48) மேட்டிமை சாதியினருக்காக காவல் துறையினரின் தலித்துக்கள் மீதான அதிகார அடக்குமுறை (ப.42) ஆகியவற்றோடு நில்லாது. மேலும் “நாயக்கமாருகளுக்கு வேலைக்குப் போம்போதெல்லாம் அவுக சாமாஞ்சட்டிகளைத் தொட்டுரக்கூடாது. அவுக இருக்கறப் பக்கம் போகக்கூடாது. ஒதுங்கியே நிக்கனும், இப்படி சட்டம் போடுவாக” (ப. 56) என்ற கூற்றின் மூலமும் பொதுத் தளத்திலான வேலையடிப்படையிலமைந்தத் தீண்டாமைக் கொடுமைகளையும் ஒடுக்குதலையும் ஆசிரியர் பாமா பலவாறாக விளக்குகிறார்.

“கலக்கல்” புதினத்திலோ தாழ்த்தப்பட்ட இனமக்களின் விழிப்புணர்விற்காகச் செயல்பட்டவரான சின்னப்ப வாத்தியாருக்கு வேலை தளத்தில் இழைக்கப்படும் கொடுமைகள்இ அச்சுறுத்தல்கள்இ அவர் மீதும் எழுப்பும் கண்டனங்கள் மற்றும் அவருக்கு எதிராகப் பிரித்தாளும் யுக்தியைக் கையாள்வது. அதனால் அவர் குடும்பம் படும் துயரங்கள், அவமானங்கள் (பக். 3 – 6) இவற்றோடு குடும்பத்தளத்தில் வாழும் பெண்களின் நிலை (பக்.11- 12) மேலும் “ஏழைகள் மீது அன்பு செய்யுங்கோ........... இயேசு ஏழைக்குடிலில் பிறந்தார். ஏழைகளுக்காகச் செய்தது........ இயேசுவுக்கே செய்யறது.......... இப்படியெல்லாம் கோயில்ல பேசுவாக. ஆனா அந்த ஏழை ஜனங்கள் மானத்தோடே மரியாதையோட வாழ கத்துக்கொடுத்த தப்புன சாதிப்பாங்க” (ப. 12) என்ற உரையாடல்களின் மூலம் தலித்துக்களின் நிலையானது சமூக, சமயப் பொதுத் தளங்களிலேயே மிகவும் மோசமானதாகவே தான் இருந்து வந்துள்ளது என்பதனை அறிய முடிகின்றது. தலித்துக்களுக்குள் நிகழும் மனப்போராட்டங்கள் (ப 24) இவை உள்ளிட்ட நிலைகளில் பல்வேறானக் கொடுமைகளை இவ்விரு புதினங்களும் நகர்த்திச் செல்கின்றன.

**முடிவுரை**

தலித்பெண் புதின படைப்பாளிகளான “பாமா மற்றும் விடிவெள்ளி” ஆகியோர் படைத்தளித்த “கருக்கு, கலக்கல்” என்ற தலித் தன்வரலாற்றுப் புதினங்கள் உளவியல் நோக்குடன், சமூக அக்கறையும் சுயவிடுதலையும் கலந்த நிலையிலேயே வெளி வந்துள்ளது. கத்தோலிக்கக் கிறிஸ்தவச் சமயத்தின் பெயரால் நடத்தப்பட்டு வரும் கல்வித்தளங்களிலும், துறவு சார்ந்தக் கல்விப்பயிற்சி யைங்களிலும் தான் தலித்துகளின் மீதானத் தீண்டாமை பாராட்டுதலும், பாலியல் ரீதியிலான ஒடுக்குதல்களும் அதிகமாக நிகழ்த்தப்படுகின்றது என்பதும் புலப்படுகின்றது. தலித்துக்கள் கல்வியறிவுப் பெற்று விட்டால் அவர்களது சிந்தனைக் கூர்மையடைந்து விடுமோ! கிளர்ச்சியில் ஈடுபடுவார்களோ! என்று கருதுகிற மேலாதிக்க நிலையில் உயர்பதவித்தளத்தில் உள்ளவர்களின் பயம் கலந்த நிலையிலேயேதான் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களைத் தலைதூக்கவிடாது இத்தகையக் கொடுமைகளைப் புரிகின்றனர் என்பதையும் புதினங்கள் வழி அறியமுடிகிறது. கலப்பு மணம், உடனுண்ணுதல் (சமபந்தி முறை), மனித நேயச் சமத்துவ உறவுமுறை இவை உள்ளிட்ட சில நற்பண்புகளானது மனித சமுதாயத்தில் சாதி, மதம், இன, மொழி பேதங்கடந்து மலருமேயானால் நிச்சயமாய் தீண்டாமை ஒழிந்துவிடும் என்ற முடிவையும் இக்கட்டுரையானது தீண்டாமைக்குரியத் தீர்வாகக் கொண்டு நிறைவெய்துகின்றது.